Judicial Form No.53
(See Rule 42)
DEPOSITION OF WITNESS
(Chapter XXIII, Cr.P.C.)
IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE OF WATRAP

C.C. No:173 of 2024

DATE : 13.05.2025

Depositions of witness for Prosecution

PW: 4

| | | | |
|---|---|---|---|
| Name | ராமராஜ் | Caste | |
| Father/Husband's Name | சங்கையா | Calling | |
| Village | | Religion | |
| Taluk | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 13th day of May 2025

**(1, 3 எதிரிகள் ஆஜர். 2ம் எதிரி ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.317ன் படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை : –**

1) நான் அழகாபுரியில் வசித்து வருகிறேன். அழகாபுரி பஸ் ஸ்டாப்பில் கடை வைத்துள்ளேன். அ.சா.1 எனது தம்பி ஆவார். 06.11.2022ம் தேதி எனது தம்பி அவருக்கு சொந்தமான டாடா சுமோவை சவாரிக்கு சென்றுவிட்டு திரும்பி அவருடைய கடைக்கு கிழக்கு பக்கம் நிறுத்திவிட்டு சென்றார் மறுநாள் காலை 6 மணிக்கு கடையை திறக்க வரும் போது காரை காணவில்லை. இது சம்மந்தமாக அக்கம் பக்கத்தில் விசாரித்து பார்த்தார் தகவல் கிடைக்கவில்லை. பின்னர் இது சம்மந்தமாக நத்தம்பட்டி காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். சுமார் ஒரு வாரம் கழித்து கார் கிடைத்து விட்டதாக நத்தம்பட்டி காவல் நிலையத்தில் இருந்து தகவல் சொன்னார்கள். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை : –**

1) சம்பவம் தொடர்பாக யார் புகார் கொடுத்தார் என்றால் செந்தில்குமார் கொடுத்தார். வழக்கில் காணாமல் போனதாக சொல்லப்படும் வாகனத்தின் பதிவு எண் தெரியுமா என்றால் தெரியாது. வாகனத்தின் கலர் கருஞ்சிவப்பு. வாகனம் தொலைந்துவிட்டதாக எனக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் மறுநாள் 07.11.2022. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது. சம்பவ இடத்தை நான் நேரில் சென்று பார்த்தேன். காணாமல் போன வண்டி நிறுத்தப்பட்டிருந்த இடம் எனக்கு தெரியுமா என்றால் கடைக்கு கிழக்கு பக்கம் தெற்கு நோக்கி நிறுத்தப்பட்டிருந்தது வலது பக்கம் பின்னாடியுள்ள கண்ணாடி உடைபட்டிருந்தது. சம்பவம் தெரிந்து தான் சம்பவ இடத்திற்கு வந்தேன் என்று சொன்னால் சரிதான். சம்பவ இடத்தில் வேறு பொருட்கள் இருந்ததா என்றால் உடைபட்ட கண்ணாடி துண்டுகள் மற்றும் காரின் கதவின் கைப்பிடி கீழே இருந்தது. சம்பவ இடத்தை பார்வையிடும்

போது வேறுசில நபர்களும் இருந்தார்கள். சம்பவம் சம்மந்தமாக அ.சா.1 எப்போது புகார் கொடுத்தார் என்றால் 07.11.2022 ம் தேதி.

**மறு விசாரணை : – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு எதிரியின் முன்னால் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு